*9*

# "எல்லாவற்றையும் கர்த்தருடைய நாமத்திலே செய்யுங்கள்"

வங்கியில் உள்ள எங்கள் கணக்கில் இருந்து ஒவ்வொரு மாதமும் கார் இன்சூரன்ஸ் கம்பெனி ஒன்றுக்குப் பணம் அனுப்பப்படுகிறது. நான் அந்தக் கம்பெனிக்கு ஒரு காசோலையை ஒருக்காலும் எழுதியதில்லை. இன்சூரன்ஸ் கம்பெனி, பணம் செலுத்தும் வேளை வந்தது என்று ஒருக்காலும் என்னிடம் கூறியதில்லை. இருப்பினும், எனது கணக்கில் இருந்து இன்சூரன்ஸ் கம்பெனிக்குப் பணம் செலுத்தும்படி நான் வங்கியை அனுமதித்துள்ள எனது கையொப்பமிட்ட படிவம் ஒன்று வங்கியில் இருப்பதால், இந்தப் பணப் பரிமாற்றம் குறித்து ஒழுங்கு முறைக்கு எதிரான அல்லது சட்ட விரோதமான விஷயம் எதுவும் இருப்பதில்லை. வங்கியிடம் நான் எழுத்துப் பூர்வமாக அனுமதி கொடுத்தி ருப்பதால்தான் வங்கியிலிருந்து பணம் இன்சூரன்ஸ் கம்பெனிக்குப் பரிமாற்றம் செய்யப்படுகிறது. ஏற்புடைய தாள்களில் எனது கையெழுத்து இல்லாமல், வங்கியானது எனது கணக்கில் இருந்து பணத்தை எடுத்து எவரொருவருக்கும் அதை அனுப்ப அதிகாரம் கொண்டிருப்பதில்லை. எனது பணம் மற்றவர்களுக்கு எனது அனுமதியின் பேரில், அதாவது எனது அனுமதியின் பேரில் *மாத்திரமே* செலுத்தப்படுகிறது.

இதே போன்றதொரு செயல்முறையில் கிறிஸ்துவின் அதிகாரத்துவ மானது கிறிஸ்தவர்களின் வாழ்வில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இது நாம் விசுவாசிக்கும் மற்றும் செய்யும் ஒவ்வொரு விஷயத்தையும் உள்ளடக்குகிறது. கர்த்தருடைய "நாமத்திலே" விஷயங்கள் செய்யப்படுதல் என்பதைக் கொண்டு புதிய ஏற்பாடு இயேசுவின் அதிகாரத்துவத்தை வலியுறுத்துகிறது.

## "கர்த்தருடைய நாமத்தினாலே" இரட்சிப்பு

கிறிஸ்தவ விசுவாசத்தின் நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகள் ஆகியவை பற்றி இயேசுவே எல்லா அதிகாரமும் கொண்டுள்ளார். இயேசு தமது பிதாவினிடத்திற்கு எழுந்து செல்வதற்கு முன்னர், "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று கூறினார் (மத்தேயு 28:18). இயேசுவின் சீஷர்கள் மக்களிடத்தில், அவர் மூலமாக மாத்திரமே இரட்சிப்பு வருகிறது என்று ஏற்றுக்கொள்ளும்படி கேட்க வேண்டும் என்றால் இந்தப் போதனை அவசியமானது என்று இயேசுவும் அவரது சீஷர்களும் புரிந்து கொண்டிருந்தனர். அவர்கள் இரட்சிப்பை பற்றியும் இயேசுவின் அதிகாரத்தினால் அவரது நாமத்திலே நித்தியஜீவனைப் பெறுவது எவ்வாறு

என்பதைப் பற்றியும் போதித்தனர்.

இயேசுவின் சீஷர்கள் அவரது அதிகாரத்துவத்திற்கு எவ்வாறு பதில்செயல் செய்ய வேண்டும் என்பது பற்றிய அறிவுறுத்துதல்களுடன் இயேசு தமது உரிமை கோருதலை ஏற்படுத்தத் தொடர்ந்தார்:

> அப்பொழுது இயேது சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. *ஆகையால்,* நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார் (மத்தேயு 28:18-20; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

“ஆகையால்” என்ற வார்த்தை, அதிகாரத்துவத்தை இயேசு உரிமைகோருதலை இவ்வசனப் பகுதியில் பின்தொடரப்படும் ஒவ்வொரு விஷயத்துடனும் இணைக்கிறது. இந்த சந்தர்ப்பப்பொருளில் *சீஷராக்குதல்* என்பதே முதன்மை வலியுறுத்தமாக உள்ளது. (அதாவது அவரது உரையின் கிரேக்க பிரதான வினைச் சொல்லின் அர்த்தமாக உள்ளது.) சீஷர்களாக்கும் வழியானது மற்ற மூன்று வினைச் சொற்களினால் குறிப்பிடப்பட்டுள்ளது. இவைகள் பிரதான வினைச்சொல்லை விளக்கப்படுத்தும் மூன்று எச்ச வினைகளாக உள்ளன. இயேசுவின் சீஷர்கள் போக வேண்டியிருந்தது; பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுக்க வேண்டி இருந்தது; மற்றும் இயேசு கட்டளையிட்ட யாவற்றையும் போதிக்க வேண்டியிருந்தது. சகல அதிகாரமும் கொண்டிருக்கும் இயேசு, அவர்கள் இவற்றைச் செய்யும்படி அவர்களிடத்தில் *கூறினார்*. அவரது அதிகாரத்துவத்தின் காரணமாக, சீஷர்களாக்குவதற்கான அவர்களின் முயற்சிகள், ஞானஸ்நானம் பெறும்படிக்கு அவர்களின் அழைப்பு மற்றும் அவர்களின் போதனை ஆகியவை, இதுபோன்ற மற்ற முயற்சிகளுக்கு மேலாக நின்றன.[1]

இயேசுவின் அதிகாரத்துவம் மற்றும் இரட்சிப்பின் அளிப்பு ஆகியவற்றிற்கு இடையிலான தொடர்பு புதிய ஏற்பாட்டின் மற்ற வசனப்பகுதிகளிலும் காணப்படுகிறது. இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முந்திய நாள் இரவில், அவர் தமது சீஷர்களுக்கு நிகழ்த்திய பிரிவு உபசார போதனையில், தாம் ஒருவரே தேவனிடத்திற்குச் செல்லும் வழியாக இருப்பதாக அறிவித்தார்: “அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்” (யோவான் 14:6). கொரிந்தியர்களுக்குப் பவுல், தாமும் தம்முடன் கொரிந்து நகரத்தில் ஊழியம் செய்திருந்தவர்களும், “தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல் லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாதிபதிகளாய்” இருந்ததாகக் கூறினார். கிறிஸ்துவினிமித்தம் அவர், மக்கள் தேவனை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்படும்படி, அவர் “தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்” என்று கூறினார் (2 கொரிந்தியர் 5:20).

ஒருவேளை நடபடிகள் 4ம் அதிகாரத்தில், பேதுரு தாம் ஒரு சப்பாணியைக் குணமாக்கினதையும் அதைத்தொடர்ந்து இயேசுவைப் பற்றிய தமது போதனையையும் தற்காத்துக் கூறியதில், கிறிஸ்துவின் அதிகாரத்துவம் பற்றிய மிகவும் முழுமையான கூற்று காணப்படலாம்.

> அப்பொழுது பேதுரு பரிசுத்த ஆவியினாலே நிறைந்து, அவர்களை நோக்கி: ஜனத்தின் அதிகாரிகளே, இஸ்ரவேலின் மூப்பர்களே, பிணியாளியாயிருந்த இந்த மனுஷனுக்குச் செய்யப்பட்ட உபகாரத்தைக்குறித்து எதினாலே இவன் ஆரோக்கியமானானென்று நீங்கள் இன்று எங்களிடத்தில் விசாரித்துக்கேட்டால், உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பட்டவருமாயிருக்கிற *நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே* இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது. வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர். *அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை* என்றான் (நடபடிகள் 4:8-12; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

பேதுரு, தமக்குக் கிறிஸ்து அதிகாரம் அளித்து பலம் அளித்ததினாலேயே, தேவாலயத்தில் சப்பாணியாயிருந்த பிச்சைக்காரர் ஒருவரைக் குணமாக்க முடிந்தது (காண்க நடபடிகள் 3:1-10). அற்புதம் பற்றியதான உண்மை எதுவோ அதுவே அதைத்தொடர்ந்து வந்த இரட்சிப்புப் பற்றிய போதனைக்கும் உண்மையாக இருந்தது (நடபடிகள் 3:11-26). எனவே நடபடிகள் 4:1-22ல் நடந்த விசாரணையானது பேதுரு செய்திருந்தவற்றை பற்றியதாக இராமல் இயேசுவின் அதிகாரத்துவத்தைப் பற்றியதாக இருந்தது. இங்கு நாம், மத்தேயு 28:18-20ன் கொள்கை நடைமுறைப்படுத்தப் படுதலைக் காணுகிறோம். அப்போஸ்தலர்கள் அளித்த இரட்சிப்பு என்பது, அவர்கள் தாங்களே அளித்ததாக வாக்குத்தத்தம் செய்ததாக இராமல், கிறிஸ்துவின் நாமத்திலே - அல்லது கிறிஸ்துவின் அதிகாரத்திலே - அவர்கள் அளித்ததாக இருந்தது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 2ல் பேதுரு, தமது பிரசங்கத்திற்கு நேர்மறையாகப் பதில்செயல் செய்த மக்களிடத்தில், "நீங்கள் மனந்திரும்பி ... *இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே* ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறினார் (நடபடிகள் 2:38; என்னால் வலியுறுத்தப்படுகிறது). நடபடிகள் 3ல், சப்பாணியாயிருந்த ஒரு மனிதர் குணமாக்கப்பட்டபோது (இது அப்போஸ்தலருடைய நடபடிகள் 4 மற்றும் 5ம் அதிகாரங்களில் காணப்படும் நேருக்கு நேரான சொற்தாக்குதல்களுக்கு வழிநடத்திற்று), அம்மனிதரை *"நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே"* எழுந்து நடக்கும்படி பேதுரு கட்டளையிட்டார் (நடபடிகள் 3:6; என்னால் வலியுறுத்தப்படுகிறது). பேதுருவையும் யோவானையும் துன்புறுத்திய யூதத்தலைவர்கள், இயேசுவின் அதிகாரம் பற்றிப் பேதுருவும் யோவானும் கூறியது என்ன என்பதைப் புரிந்து கொண்டிருந்தனர். அவர்கள் *"இயேசுவின் நாமத்தைக்குறித்து*

எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று" அப்போஸ்தலர்களுக்குக் கட்டளையிட்டனர் (நடபடிகள் 4:18; என்னால் வலியுறுத்தப்படுகிறது; காண்க நடபடிகள் 5:40). துன்புறுத்தலினுடைய இந்த வேளைக்குப் பின்பு சீஷர்கள் ஜெபிக்க ஒன்றுகூடியிருந்தபோது, "உம்முடைய *பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே* அடையாளங்களும் அற்புதங்களும் (தொடர்ந்து) நடக்கும்படி செய்ய" வேண்டும் என்பதே அவர்களின் வேண்டுகோளாக இருந்தது (நடபடிகள் 4:30; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

இயேசுவின் அதிகாரத்துவம் பற்றிய வேண்டுகோள் விடுத்தலானது, குழந்தைப் பருவத்தில் இருந்த சபை வளர்ந்து ரோமப் பேரரசு முழுவதிலும் பரவிய வேளையில் தொடர்ந்தது. நடபடிகள் 8ல் பிலிப்பு, சமாரியர்களுக்குப் போதித்தபோது அவர் பெந்தெகொஸ்தே நாளில் பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்ளும் செய்திருந்ததைச் செய்தார், அவர்களை "கர்த்தராகிய *இயேசுவின் நாமத்தினாலே* ஞானஸ்நானத்தை" பெற்றுக்கொள்ளும்படி அழைத்தார் (நடபடிகள் 8:16; என்னால் வலியுறுத்தப்படுகிறது). நடபடிகள் 9ல் பவுலின் மனமாற்றம் பற்றி, எருசலேம் சபையாருக்கு முன்பாக பர்னபா தற்காப்பு வாதம் செய்தபோது அவர், "அவன் (சவுல்) *இயேசுவின் நாமத்தினாலே* தைரியமாய்ப் பிரசங்கித்த காரணத்தால்" (நடபடிகள் 9:27; என்னால் வலியுறுத்தப்படுகிறது) சவுல் நம்பப்படக்கூடியவராக இருந்தார் என்று கூறினார்.

இயேசுவின் அதிகாரம் பற்றிய கேள்வியானது, நடபடிகள் 10 மற்றும் 11ம் அதிகாரங்களில் இன்னும் பெரிய அளவில் தனிச்சிறப்பைப் பெற்றுள்ளது, அங்கு முதன்முறையாகப் புறஜாதியார் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு பதில் செயல் செய்திருந்தனர். அவர்களுக்கு இரட்சிப்பை அளிக்கப் பேதுரு எந்த அதிகாரத்தைக் கொண்டிருந்தார்? அவர் யூதரல்லாத மக்களிடத்தில் இணைவுகொண்டிராதவரும் "தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்தி" ராதவருமான யூத மனிதரின் வகையாயிருந்தார்[2] (நடபடிகள் 10:14; காண்க வசனம் 28). அவர் கொர்னேலியு போன்ற புறஜாதியாரிடத்தில் எவ்வாறு ஐக்கியம் கொள்ள முடியும்? பேதுரு அங்கு செய்திருந்தவற்றைக் கேள்விப்பட்ட எருசலேம் சபையிலிருந்த சிலர் அந்தக் கேள்வியைக் கேட்டனர் (நடபடிகள் 11:1-18). அதற்கான பதில் நடபடிகள் 10:44-46ல் காணப்படுகிறது. கொர்னேலியு மற்றும் அவரது வீட்டார்மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்தார், அவர்களால் அந்நிய பாஷைகளில் பேச முடிந்தது.[3] இது நடபடிகள் 2ல் அப்போஸ்தலர்களுக்கு நடந்திருந்த அதே விஷயமாக இருந்தது. இதைக் கண்ட பேதுரு, தேவன் புறஜாதியார் மத்தியில் கிரியை செய்தார் என்று உணர்ந்தறிந்தார். இந்தக் காரணத்தினால், அவர்கள் ஞானஸ்நானம் பெற்று சபையில் சேர்வதை எவரொருவரும் தடைசெய்யக் கூடாதிருந்தது (வசனங்கள் 46, 47). ஆகவே, "*கர்த்தருடைய நாமத்தினாலே* அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கும்படி கட்டளையிட்டான்" (வசனம் 48; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

இயேசுவின் அதிகாரத்தில் பவுல், ரோமப்பேரரசின் புறஜாதியார் உலகத் திற்குச் சுவிசேஷத்தை எடுத்துச்சென்று, அற்புதமான செயல்களை நிகழ்த்தி மக்களை இரட்சிக்கப்படும்படி அழைத்தார். பிலிப்பி நகரில் அவர், பொல்லாத ஆவியொன்றை, "நீ இவளை விட்டுப் புறப்படும்படி *இயேசுகிறிஸ்துவின்*

*நாமத்தினாலே* உனக்குக் கட்டளையிடுகிறேன்" என்று கூறித் துரத்தினார் (நடபடிகள் 16:18; என்னால் வலியுறுத்தப்படுகிறது). நடபடிகள் 19ல் அவர், கிறிஸ்துவினுடைய ஞானஸ்நானத்தைப் பெற்றிராமல், ஆனால் யோவானின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்த சிலரை எதிர்கொண்டார். அவர்களுக்கு மேலும் போதித்த பின்பு, "அவர்கள் *கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே* ஞானஸ்நானம் பெற்றார்கள்" (வசனம் 5ஆ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). கொரிந்து நகரில் இருந்த சபையின் பிரச்சனைகளைப் பவுல் கையாண்டபோது, அங்கிருந்த சகோதரர்கள் ''பவுலின் நாமத்தினாலே'' ஞானஸ்நானம் பெறவில்லை என்பதை அவர்களுக்கு அவர் நினைவூட்டினார் (1 கொரிந்தியர் 1:13). அவர்களில் பலருக்குத் தாம் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை என்பதால் தாம் தேவனை ஸதோத்திரிப்பதாக அவர் கூறினார், அவ்வாறு அவர் கொடுத்திருந்தால், மக்கள் பவுலின் நாமத்தினாலே தாங்கள் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டோம் என்று அவர்கள் கூறுவதை தாம் விரும்பவில்லை என்றும் அவர் கூறினார் (1 கொரிந்தியர் 1:14, 15). அவர் தமது வாசகர்கள், கிறிஸ்துவின் நாமத்திலே ஞானஸ்நானம் பெற்றிருந்தனர் என்ற உண்மையைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று விரும்பினார். பிற்பாடு அவர் கொரிந்தியர்களை, அவர்களின் உலகத்தினுடைய பாவம் நிறைந்த நிலையில் இருந்து அவர்கள் எவ்வாறு மீட்கப்பட்டு இருந்தனர் என்பதை நினைத்துப் பார்க்கும்படி வேண்டுகோள் விடுக்கையில், அவர்கள் இயேசுவின் அதிகாரத்துவத்திற்கு அவர்களின் பதில் செயலில் என்ன செய்திருந்தனர் என்பதை அவர்களுக்கு அவர் நினைவூட்டினார். "*கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும்,* நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்" (1 கொரிந்தியர் 6:11; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

விசுவாசிகள் என்று தங்களை அறிவித்துக் கொள்பவர்கள் இயேசுவின் அதிகாரம் மற்றும் நாமம் தவிர வேறு எந்த நாமத்தினாலும் - கேபா (பேதுரு), அப்பொல்லோ அல்லது பவுல் ஆகியோரின் நாமத்திலும்கூட - இயங்க உரிமை கொண்டிருப்பதில்லை என்பதைப் பவுல் தெளிவாக்கினார் (காண்க 1 கொரிந்தியர் 1:10-13). அவர்கள் குறிப்பிடத்தக்க இம்மனிதர்களின் நாமத்தைத் தரித்துக்கொள்ள தடை செய்யப்பட்டிருந்தால், இன்றைய நாட்களில் மனிதர்களின் நாமங்களை மக்கள் எந்த நாமத்திலே தரித்துக் கொள்கின்றனர்?

தொடக்க காலக் கிறிஸ்தவர்கள், இயேசுவின் அதிகாரத்துவத்தைப் பற்றித் தெளிவாக அறிந்து இருந்தனர் மற்றும் அதைத் தாங்கள் செய்த ஒவ்வொரு செயலுக்கும் அடிப்படை ஆக்கிக்கொண்டனர். அவர்கள் "கர்த்தருடைய நாமத்திலே" விஷயங்களைச செய்தல் பற்றிப் பேசும்போது, தாங்கள் அவரில் வெறுமனே விசுவாசம் கொண்டிருப்பதை மாத்திரம் கூற விருப்ப நோக்கம் கொண்டிருக்கவில்லை. மாறாக அவர்கள், ஒவ்வொரு மாதமும் வங்கியானது எனது பெயரில் இன்சூரன்ஸ் கம்பெனிக்குப் பணம் அனுப்பும்போது நாம் பின்பற்றும் அதே கொள்கையின் அடிப்படையில் செயல்பட்டனர். அவர்கள், பரலோகத்தில் கட்டவும் கட்டவிழ்க்கவும் பட்டிருந்த விஷயங்களைப் போதிக்க இயேசுவின் மூலம் கட்டளையிடப்பட்டிருந்தனர் (மத்தேயு 16:19; 18:18; 28:19, 20). அவர்கள் கூறியது அவரது அங்கீகாரத்தைப் பெற்றிருந்தது என்று காண்பிக்கத் தேவையான வல்லமை அவர்களுக்குத் தரப்பட்டு இருந்தது

*(காண்க எபிரெயர் 2:3, 4). ஆகவே அவர்கள் - தங்கள் சொந்த அதிகாரத்தினால் அல்ல, ஆனால் அவருடைய அதிகாரத்தினால் - இரட்சிப்பின் வாக்குத்தத்தத்தை அளித்தார்கள்.*

## "கர்த்தருடைய நாமத்தில்" சபையின் செயல்கள்

இரட்சிப்பின் கொடையானது இயேசுவின் அதிகாரத்தினால் மாத்திரமே பாவிகளுக்கு அளிக்கப்படுகிறது. சகல அதிகாரமும் கொண்டுள்ள இயேசுவினால் நிலைநாட்டப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றும்போது மாத்திரமே ஒரு நபர் இரட்சிக்கப்பட முடியும். அதே அதிகாரமானது இரட்சிப்பிற்குப் பின்பு கிறிஸ்தவர்களின் வாழ்வில் விரிவாக்கம் அடைகிறது. கிறிஸ்தவர்களின் செயல் களைப் பொறுத்த மட்டில் புதிய ஏற்பாட்டில் "நாமத்தினால்" என்ற அதே மொழி நடையானது, விசேஷித்த செயல்கள் மற்றும் இரட்சிப்பை வழங்குதல் ஆகியவை தொடர்பாகப் பயன்படுத்தப்பட்டு உள்ளது.

கொரிந்தியர்களின் பிரிவினைகள் பற்றி அவர்களைப் பவுல் கடிந்துகொண்டு, அவர்கள் *"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே"* கருத்தொருமித்து இருக்க வேண்டும் என்று வேண்டிக்கேட்டுக்கொண்டார் (1 கொரிந்தியர் 1:10; என்னால் வலியுறுத்தப்படுகிறது). மேலும் அவர்கள், தனது தகப்பனின் மனைவியுடன் சட்டவிரோதமான உறவில் ஈடுபட்டு இருந்தவனை எதிர்த்து நிற்பதில், அம்மனிதனைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று *"கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே"* அவர்களுக்குக் கூறினார் (1 கொரிந்தியர் 5:4; என்னால் வலியுறுத்தப்படுகிறது). எபேசியர் 5:17-20ல் பவுல், புதிதாக்கப்பட்ட வாழ்வைப் பழைய பாவ வாழ்வுடன் நேரெதிராக ஒப்பிட்டார்.[4] அவர் எபேசியர்களுக்கு, தேவனிடத்தில் நெருக்கமாக இருக்கும்படியும் அவரது ஆவியானவரால் நிரப்பப்பட்டு இருக்கும்படியும் அறிவுறுத்தினார். "*நம்முடைய கர்த்தராகிய இயேசுகறிஸ்துவின் நாமத்தினாலே* எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும், பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து" என்பது அவரது கட்டளைகளில் ஒன்றாக இருந்தது (வசனம் 20; என்னால் வலியுறுத்தப்படுகிறது).[5] தெசலோனிக்கேயில் இருந்த சபையானது இதே வகையான அறிவுறுத்துதலைப் பெற்றது. அவர்கள், "எங்களிடத்தில் ஏற்றுக்கொண்ட முறைமையின்படி நடவாமல், ஒழுங்கற்று நடக்கிற சோம்பேறித் தனமான சகோதரர்களை எதிர்கொண்டனர்" (2 தெசலோனிக்கேயர் 3:6). ஒழுங்கற்று நடக்கிற "சோம்பேறித்தனமான சகோதரர்களை விட்டு விலகவேண்டும்" என்று பவுல் *"கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே"* கட்டளையிட்டார். (என்னால் வலியுறுத்தப்படுகிறது.)

சபையில் செய்யப்படுகிற விஷயங்களுக்கு, கிறிஸ்தவர்கள் இயேசுவின் அதிகாரத்தைக் கொண்டிருக்க வேண்டியதன் அவசியத்தைப் புதிய ஏற்பாடு சீர்ப்பொருத்தமாகக் காண்பிக்கிறது. கொலோசெயர் 3:17ம் வசனமானது, அந்த சத்தியத்தை மிகவும் உள்ளடக்கிய கூற்றாக இருக்கிறது. பவுல், "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் *கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே* செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்" என்று எழுதினார் (என்னால் வலியுறுத்தப்படுகிறது).

இயேசுவின் அதிகாரத்தில் எவையெல்லாம் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று

கவனியுங்கள். *Pan* ("எல்லா") என்ற கிரேக்க வார்த்தையை மொழிபெயர்க்க NASB வேதாகமம் "whatever" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது. சபையில் நாம் செய்யும் *எல்லா* விஷயங்களும் இயேசுவின் அதிகாரத்தில் செய்யப்பட வேண்டும் என்று பவுல் கூறினார். இவ்விடத்தில் இந்தச் சொற்றொடர் (தமிழ் வேதாகமத்தில் உள்ளது போன்று) *"நீங்கள் எதைச் செய்தாலும்"* என்று மொழிபெயர்க்கப்பட முடியும். நமது விசுவாசத்தின் நடைமுறையில் நாம் செய்ய ஆலோசிக்கும் எந்த விஷயமும் இயேசுவின் அதிகாரத்துவத்திற்குக் கீழ்ப்பட்டதாக இருக்க வேண்டும்.

நாம் "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது" செய்யும் எந்த விஷயமும் இயேசுவின் அதிகாரத்தின் பேரிலேயே செய்யப்பட வேண்டும் என்று பவுல் போதித்தார். வலியுறுத்தத்திற்காக அவர் "எல்லாம்" என்ற வார்த்தையைத் திரும்பவும் கூறினார். நாம் வார்த்தையிலோ அல்லது செயலிலோ செய்கிற எல்லாமும் "கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில்" செய்யப்பட வேண்டும் என்பது இதன் அர்த்தமாக உள்ளது.[6]

கொலோசெயருக்கு எழுதிய நிருபம் முழுவதிலும் பவுல், பொதுவாகப் படைப்பிலும் மற்றும் சபையின் தலை என்ற வகையிலும் இயேசுவின் ஒப்புயர்வற்ற தன்மையின் மீது கவனம் குவித்தார் (கொலோசெயர் 1:15-20). மற்ற விசுவாச முறைமைகள், குறிப்பாக மனித தத்துவம் மற்றும் மோசேயின் நியாயப்பிரமாணம் ஆகியவற்றின் மீது அவரது அதிகாரத்திற்கு அவர் கவனத்தை அர்ப்பணித்தார் (கொலோசெயர் 2:8-23). கிறிஸ்துவின் மேன்மைத் தன்மைக்கான காரணம் கொலோசெயர் 2:12ல் முன்வைக்கப்பட்டுள்ளது, இங்கு கிறிஸ்தவர்கள் "ஞானஸ்நானத்தில் அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்" என்பதைப் பவுல் அவர்களுக்கு நினைவூட்டினார். இந்த உண்மையின் வெளிச்சத்தில், அவர்கள் புதிய மக்களாக வாழவேண்டியிருந்தது மற்றும் தங்களைக் கள்ளப்போதகர்கள் வழிவிலக்கி நடத்திச் செல்ல அனுமதிக்கக் கூடாதிருக்கவும் வேண்டியதாயிற்று (கொலோசெயர் 3:1-11).

## முடிவுரை

கொலோசெயர் 3:17ன்படி, கிறிஸ்தவ வாழ்வில் *எல்லா* அம்சங்களும் - அது ஆராதனையாக அல்லது சந்தை வெளியில் மக்களைச் சந்திப்பதாக எப்படியிருந்தாலும் - "கர்த்தராகிய இயேசுவின் நாமத்திலேயே" அவைகள் செய்யப்பட வேண்டியதாக உள்ளது. ஆகவே நாம் செய்யும் எந்தச் செயலும் இயேசுவின் அதிகாரத்தின் பேரிலேயே செய்யப்படவேண்டும்.

---

குறிப்புகள்

[1]பழங்கால உலகத்தில் கிறிஸ்தவர்கள் மாத்திரமே, ஒரு விசுவாச அமைப்பு அல்லது வாழ்வின் வழியைப் பின்பற்றும்படி மக்களை அழைத்தவர்களாக இருக்கவில்லை. அவர்கள் வாழ்வின் தங்கள் வழிகளில் பிரவேசிக்க ஞானஸ்நானத்தை கேட்டுக்கொண்ட ஒரே குழுவாகவும் இருக்கவில்லை. இயேசுவின் அதிகாரத்துவம்தான் கிறிஸ்தவ போதனை மற்றும் ஞானஸ்நானத்தைத் தனிச்சிறப்பு மிக்கதாக்குகிறது. [2]யூதர்களின் உணவு முறை

*பற்றிய பிரமாணங்கள் அவர்களைப் புறஜாதியாரிடத்தில் (யூதர் அல்லாத மக்களிடத்தில்) இருந்து வித்தியாசப்படுத்தின விஷயங்களின் மத்தியில் இருந்தன. விசுவாசம் நிறைந்த ஒரு யூதர் கோஷர் உணவை மாத்திரமே உண்டார். [3]பாஷைகளில் பேசும் திறன் என்பது ஒரு நபர் தாம் முன்பு படித்திராத ஒரு மொழியில் பேசக்கூடும்படிக்குப் பரிசுத்த ஆவியானவரிடத்தில் இருந்து பெற்றுக்கொண்ட விசேஷித்த வரமாக இருந்தது. [4]இந்த உபதேசக் கூற்றிற்கு எபேசியர் 4:17-24 ஐயும், பின்பு, குறிப்பிட்ட சில நடைமுறைப்பயன்பாடுகளுக்கு 4:25-5:20ஐயும் காணவும். [5]ஜெபத்தைப் பற்றிப் பவுல் இதைக் கூறுவார் என்பது நம்மைத் திகைப் படையச் செய்யக் கூடாது, ஏனெனில் இயேசு தமது நாமத்திலே தமது சீஷர்கள் பிதாவினிடத்தில் வேண்டுகோள் விடுக்க முடியும் என்று வாக்குத்தத்தம் செய்திருந்தார்: "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன்" (யோவான் 14:13, 14). [6]கொலோசெயர் 3:17ம் வசனம் நடபடிகள் 4:10க்கு இணையானதாக உள்ளது. இவை இரண்டுமே மக்கள் "இயேசுவின் நாமத்தினாலே (அதிகாரத்தினாலே)" வாழ வேண்டும் என்ற உண்மையை முக்கியத்துவப்படுத்துகின்றன. அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் உள்ள கூற்றானது அவிசுவாசிகளுக்குக் கூறப்பட்டது. அதே வேளையில் கொலோசெயர் நிருபத்தில் உள்ள கூற்று கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது; ஆனால் அது, தேவன் எல்லா மக்களும் இயேசுவின் அதிகாரத்தின்கீழ் வாழவேண்டும் என்று விருப்ப நோக்கம் கொண்டுள்ளார் என்பதற்கு மேலும் ஆதாரமாக உள்ளது.*